**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு

**2026–ம் வருடம் ஜூன் மாதம், 5–ம் நாள், வெள்ளிக்கிழமை**

<u>ஆண்டு பட்டியல் வழக்கு எண்.37/2022</u>

<u>CNR NO: TNTJ16–0003882022</u>

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
பூதலூர் காவல் நிலையம்,
(குற்ற எண்.222/2018. ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1 உதயகுமார், வயது 57/2026
த.பெ. அருணாச்சலம்,
2 இராமதாஸ், வயது 68/2026
த.பெ. சங்கிலிமுத்து,
3 தினேஷ், வயது 30/2026
த.பெ. உதயகுமார்,
4 திவாகர், வயது 29/2026
த.பெ. உதயகுமார்,
கள்ளர் தெரு, புங்கனூர்,
பூதலூர் தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம். ...எதிரிகள்

<table>
<tr><td colspan="7">மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>S.No.</td><td colspan="6">CASE SUMMARY</td></tr>
<tr><td rowspan="2">(i)</td><td rowspan="2">The Period of remand of the accused fx</td><td rowspan="2">:</td><td colspan="2">Name of the Accused</td><td>Date of Remand</td><td>Release on</td></tr>
<tr><td>1</td><td>Udhayakumar</td><td colspan="2" rowspan="3">Anticipatory Bail Order dated 07.12.2018 in Cr.M.P.No. 4972/2018 by Honourable Principal District and Sessions Court, Thanjavur</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>2</td><td>Ramadoss</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>3</td><td>Dhinesh</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>4</td><td>Dhivakar</td><td>04.12.2018</td><td>Bail Order in Cr.M.P.No. 4197/2018, Dt.07.12.2018 by Judicial</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.05 19:43:06 +0530

<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td>Magistrate Thiruvaiyaru</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">The date of filing of the complaint/final report in the Court</td><td rowspan="2">:</td><td colspan="3">Filing of Complaint</td><td>Filing of Final Report</td></tr>
<tr><td colspan="3">04.12.2018</td><td>12.05.2022</td></tr>
<tr><td>(iii)</td><td>The date of committal of the case to the Court of Session</td><td>:</td><td colspan="4">NIL</td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">22.02.2023</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td>-</td></tr>
<tr><td rowspan="8">(vi)</td><td rowspan="8">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="8">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>1.</td><td>Kalaiyarasan</td><td>03.05.2023</td><td>11.04.2024</td></tr>
<tr><td>2.</td><td>Arivazhagan</td><td>03.05.2023</td><td>03.05.2023</td></tr>
<tr><td>3.</td><td>Yogeshwaran</td><td>04.07.2023</td><td>04.07.2023</td></tr>
<tr><td>4.</td><td>Veeramani</td><td>11.01.2024</td><td>11.01.2024</td></tr>
<tr><td>5.</td><td>Pavulraj</td><td>23.10.2024</td><td>23.10.2024</td></tr>
<tr><td>6.</td><td>Dr. Dhivakar</td><td>16.12.2024</td><td>16.12.2024</td></tr>
<tr><td>7.</td><td>Chitra (IO)</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec</td><td>:</td><td colspan="4">20.04.2026</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:15 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **313 of the Code** | | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and** | : | Not Applicable. | | |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | : | **Sessions Court CMP Numbers** | **High Court No and Date of Stay** | **Result** |
| | | | NIL | | |

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | | எதிரிகள் புகார்தாரரை வழிமறித்ததன் மூலம் இதச. பிரிவு.341–ன் கீழ் |
| 2–வது குற்றச்சாட்டு | | எதிரிகள் புகார்தாரரை பொது இடத்தில் அசிங்கமான வார்த்தையால் திட்டி அருவருப்பு ஏற்படுத்திய செயலுக்காக இதச. பிரிவு.294(b)–ன் கீழ் |
| 3–வது குற்றச்சாட்டு | | 1–வது எதிரி புகார்தாரரை கையால் அடித்தும், 2, 4 எதிரிகள் காலால் மிதித்தும், தன்னிச்சையாக சொற்பகாயத்தை செயலுக்காக இதச. பிரிவு. 323–ன் கீழ் |
| 4–வது குற்றச்சாட்டு | : | 3–வது எதிரி கட்டையால் வாயில் குத்தி தன்னிச்சையாக சொற்பகாயத்தை செயலுக்காக இதச. பிரிவு. 324–ன் கீழ் |
| 5–வது குற்றச்சாட்டு | | 3–வது எதிரி புகார்தாரரிடம் கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்தசெயலுக்காக இதச. பிரிவு. 506(ii)–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் அல்ல. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ) தண்டனை | : | 1). 1, 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323–ன் கீழும், 3–வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 324, 506(ii)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:31 +0530

| | | |
|---|---|---|
| | | இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2). இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.<br>3).இவ்வழக்கில் **C.P.No.58/2022–ல்** ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான சுமார் **123** செ.மீ நீளமுள்ள மரக்கட்டையை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக உரு தெரியாமல் அழிக்கவேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 12.05.2022–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.37/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து, இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. பன்னீர்செல்வம், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரை பரிசீலிக்கப்பட்டு, எதிரி தரப்பில் எடுத்துரைத்த வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்தும், என் ஆய்வில் வைத்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:37 +0530

<u>**தீர்ப்புரை**</u>

எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii)–ன் கீழ் பூதலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின்படி வழக்கின் சுருக்கம்:–**</u>

கடந்த 27.11.2018–ம் தேதி இரவு 10.00 மணியளவில், புங்கனூர் புது ஆற்றங்கரை அருகே புகார்தாரர் வயலில் இருந்து வந்தபோது, எதிரிகள் முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு, எதிரிகள் புகார்தாரரை வழிமறித்து, தகாத வார்தைகளால் திட்டியும், 1–வது எதிரி கையால் அடித்தும், 2, 4 எதிரிகள் காலால் மிதித்தும், 3–வது எதிரி கட்டையால் வாயில் குத்தியும் சொற்ப காயத்தை ஏற்படுத்தி, கட்டையை காட்டி உன்னை தொலைச்சுபுடுவேன் என மிரட்டியும் 1, 2, 4 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323–ன் கீழும், 3–வது எதிரி இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 324, 506(ii)–ன் கீழும் குற்றம் இழைத்துள்ளதாக பூதலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு. 204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச. பிரிவு. 207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், 1, 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323–ன் கீழும், 3–வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 324, 506(ii)–ன் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:41 +0530

3. அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்களும், **அ.சா.பொ.1** சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:-**

புகார்தாரர் புங்கனூரில் வசித்து வருகிறார். 27.11.2018-ஆம் தேதியன்று இரவு 07.00 மணியளவில், புகார்தாரரது வயலில் மோட்டார் வைத்து வாரியிலிருந்து வரும் நீரை வயலுக்கு பாய்ச்சிக்கொண்டிருந்தபோது, 1-வது எதிரி, இவ்வாறு மோட்டார் வைத்து நீர் பாய்ச்சக்கூடாது என்று கூறி, அசிங்கமாக திட்டி, மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் இரவு 10.00 மணியளவில் எதிரிகள் நால்வரும் புகார்தாரரை வழிமறித்து, நீ என்ன பெரிய ஆளா என்று கூறி நெஞ்சில் குத்தி, கீழே தள்ளிவிட்டு,புகார்தாரரை மிதித்து, 3-ஆம் எதிரி கட்டையால் புகார்தாரரின் மூகத்தில் குத்தியதில் புகார்தாரருக்கு இரத்தம் வந்து, புகார்தாரர் மயங்கி கீழே விழுந்துவிட்டார். புகார்தாரது அண்ணன் மகன் யோகேஷ் என்பவர் புகார்தாரரை 108 ஆம்புலன்ஸ் மூலம் பூதலூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். புகார்- அ.சா.ஆ.1 கொடுத்துள்ளர்.

கடந்த 04.12.2018-ம் தேதி புகார்தாரர்-அ.சா.1 கொடுத்த புகார்-அ.சா.ஆ.1- ஐ பெற்ற உதவி ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.222/2018, ச/பி. 341, 294(பி), 324, 506(2) இதச கீழ் முதல் தகவல் அறிக்கை-அ.சா.ஆ-6 வழக்கு பதிவு செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்-அ.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம்- அ.சா.ஆ.8 தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து 123 செ.மீ நீளமுள்ள மரக்கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9-ன் மூலம் கைப்பற்றி,

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:46 +0530

படிவம்–91–அ.சா.ஆ.10 மூலம், CP No. 58/22ல் ஒப்படைக்கப்பட்டுள்ள மரக்கட்டை அ.சா.பொ.1 ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அன்றைய தினமே 13 மணியளவில் புது ஆற்றங்கரை அருகே 4–வது எதிரியை காரணம் கூறி கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டதை தெரிந்துகொண்டு, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.செந்தில் மற்றும் திவாகர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ ஆவணங்கள் அ.சா.ஆ.4 மற்றும் 5 பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து 06.01.2019–ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினர். எதிரிகளின் பதில் பதிவு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>6. இருதரப்பு வாதத்தின் சுருக்கம்:–</u>**

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரையில், அ.சா.1 வழக்கு சம்பவத்திற்கான முன் விரோதம், வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள், எந்தெந்த நபர் எவ்வாறு தாக்கினார் என்பது குறித்து குறிப்பாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், பாதிக்கப்பட்ட நபரின் சாட்சியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும், அ.சா.3 கேள்விப்பட்ட சாட்சியாக

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:51 +0530

இருந்தாலும், சம்பவ இடத்தில் எதிரிகள் இருந்தது குறித்து அவர் சாட்சியம் அளித்துள்ளதும், அ.சா.1-ன் காயங்கள் குறித்து அளித்துள்ள சாட்சியமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது என்றும், கண்ணுற்ற சாட்சிகள் நம்பகத்தன்மை உடையதாக இருந்தால், மருத்துவரின் கருத்துரை மேற்படி சாட்சியத்தை பாதிக்காது என்றும், மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதால், காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது வழக்கினை பாதிக்காது என்றும், சிறிய முரண்பாடுகளுக்காக நம்பகத்தன்மை உள்ள சாட்சிகளின் சாட்சியத்தை நிராகரிக்கக் கூடாது என்றும், பிறழ்சாட்சியும் முழுவதுமாக நிராகரிக்கத்தக்கதல்ல என்றும், அரசிற்கு ஆதரவாக உள்ள பகுதி ஏற்கக் கூடியது என்றும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் சராசரி வாழ்க்கை நடைமுறையை தள்ளி விடக்கூடிய Hyper Technical approach-ல் சாட்சிகளை பரிசீலிக்க தேவையில்லை என்று பல தீர்ப்புகளில் சொல்லப்பட்டுள்ளதாகவும், நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்ற கோட்பாட்டுடன் தவறு செய்தவர் தப்பி விடக்கூடாது என்ற கோட்பாட்டையும் நீதிமன்றம் பார்க்க வேண்டும் என்றும், அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் மூலம் எதிரிகளின் குற்ற செய்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு சொல்லப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரையில், காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடம் எது என குறிப்பாக சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சம்பவ இடம் குறித்து புகாரில் சொல்லப்படவில்லை என்றும், அ.சா.3 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி என்றும், சம்பவத்தில் புகார்தாரருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும், புகார்தாரருடன், தான் மருத்துவமனைக்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:43:57 +0530

சென்றதாக அ.சா.3 சாட்சியம் அளித்துள்ள நிலையில், அது குறித்து மருத்துவ பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றும், பார்வை மகஜர் சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறி உள்ளனர் என்றும், தரப்பினர்களுக்கு இடையே உள்ள சிவில் வழக்கு குறித்து, புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யவில்லை என்றும், அ.சா.1–ஐத் தவிர வேறு எந்த கண்ணுற்ற சாட்சிகளும் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும், முன்விரோதத்தை வைத்துக்கொண்டு கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை உரிய புலன் விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதம் சொல்லப்பட்டுள்ளது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii)–ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**8. தீர்வு:–**

கடந்த 27.11.2018–ம் தேதி இரவு 10.00 மணியளவில், எதிரிகள் முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு, வழிமறித்து, தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் தாக்கி, கீழே தள்ளி காலால் மிதித்து, 3–வது எதிரி கட்டையால் வாயில் குத்தி, கட்டையை காட்டி மிரட்டி இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323, 324, 506(ii)–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:01 +0530

செய்யப்பட்டு, அதே பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

கடந்த 27.11.2018–ஆம் தேதி 22.00 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, 04.12.2018–ஆம் தேதி 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அன்றைய தினமே மாலை 6.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கின் புலன் விசாரணை 06.01.2019–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 11.05.2022–ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபராக அ.சா.1–ம் கேள்விப்பட்ட சாட்சிகள் அ.சா–2, 3 மற்றும் 5–ஆகவும், மருத்துவர் அசா–6 ஆகவும், புலன்விசாரணை அதிகாரி அ.சா.7–ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை.

புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.1–புகாரில், கடந்த 27.11.2018–ஆம் தேதி இரவு 7.00 மணிக்கு, ஆயில் மோட்டாரை வைத்து, தனது வயல் பயிருக்கு காட்டு வாரியிலிருந்து தண்ணீர் பாய்ச்ச முயன்றபோது, 1, 2 எதிரிகள் மோட்டார் வைத்து தண்ணீர் பாய்ச்சக்கூடாது என மிரட்டியதாகவும், தான் அதை நீ எப்படி சொல்வது என்று கேட்டதாகவும், இரவு 10 மணிக்கு வீட்டிற்கு சென்றபோது, எதிரிகள் நால்வரும் புகார்தாரரை வழிமறித்து அசிங்கமான வார்த்தையால் திட்டி 1–வது எதிரி கையால் நெஞ்சில் அடித்ததாகவும், 2, 4 எதிரிகள் கீழே தள்ளி மிதித்ததாகவும், 3–வது எதிரி கட்டையால் வாயில் குத்தி, கட்டையை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து தகவல் பெற்று அங்கு சென்று புகார் பெற்றதாகவும், மனு எண் 268/18 கொடுத்து விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் புகாரில் புலன் விசாரணை அதிகாரியால்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:07 +0530

எழுதப்பட்டுள்ளது. மேற்படி மனு இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை.

சம்பவ தினத்தன்று வயலிலிருந்து தான் வீட்டிற்கு வந்ததாகவும், எதிரிகள் வழிமறித்ததாகவும் அ.சா.ஆ.1–புகாரில் சொல்லப்பட்டுள்ளது. எந்த இடத்தில் எதிரிகள் வழிமறித்தார்கள் என்று குறிப்பாக எந்த சங்கதியும் புகாரில் சொல்லப்படவில்லை. புகார்தாரர் அ.சா.1–ஆக அளித்துள்ள சாட்சியத்தில், புகார் சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். எந்த இடத்தில் எதிரிகள் வழிமறித்தார்கள் என்று புகார்தாரர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை. குறுக்கு விசாரணையில் தன்னை வழிமறித்தது எதிரி உதயகுமார் வீட்டுக்கு முன்பு என்று சாட்சியம்அளித்துள்ளார்.

புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தை சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு தயார் செய்ததாக சொல்லி தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர்– அ.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம்– அ.சா.ஆ.8–ஐ பரிசீலனை செய்ததில், சம்பவ இடமாக, காடுவெட்டி பாலக்கட்டை அருகே என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1.– புகார்தாரர் தனது சாட்சியத்தில் சொன்னது போல், எதிரி உதயகுமார் வீடு எதுவும் அந்த வரைபடத்தில் காண்பிக்கப்படவில்லை. மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் நிறைய உள்ளன என்றும் சத்தம் கேட்டு யாரும் அங்கு வரவில்லை என்று அளித்துள்ள சாட்சியமும் இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. 27.11.2018 தேதி இரவு 10.00 மணியளவில் தங்கள் தெருவில் சண்டை நடப்பதாக கேள்விப்பட்டு சென்றதாக அ.சா.2 சாட்சியமளித்துள்ளார். மாதிரி வரைபடத்தில் தெரு எதுவும் காண்பிக்கப்படவில்லை. சம்பவம் முடிந்தவுடன் சம்பவ இடம் வந்து, காயம்பட்ட புகார்தாரரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட புகார்தாரரின் அண்ணன் மகன் அ.சா.3 தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் காட்டுவாரிக்கு அருகே நடந்ததாக சாட்சியம்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:13 +0530

அளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அசா.4 மற்றும் 5 அரசு தரப்புக்கு எதிராக பிறழ் சாட்சிகளாக மாறி உள்ளனர். அதில் அ.சா.5 பார்வை மகஜரில் உள்ளது தனது கையெழுத்தே இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் மருத்துவரிடம் சிகிச்சைக்கு சென்றபோது, புது ஆற்றங்கரையில் நான்கு நபர்கள் தன்னை தாக்கியதாக சொல்லி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்பது விபத்துப் பதிவேடு–அ.சா.ஆ.4–ன் மூலம் தெரியவருகிறது. எனவே சம்பவம் புது ஆற்றங்கரையில் நடந்ததா? ஜெயக்குமார் வீட்டிற்கு எதிரில் நடந்ததா? அ.சா.2–ன் சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளது போல் தெருவில் நடந்ததா? மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டதுபோல் பாலக்கட்டை அருகே நடந்ததா? என்பது தொடர்பான அரசு தரப்பு முரண்பட்ட சாட்சியங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

27.11.2018– ஆம் தேதி இரவு 10 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, தன்னை எதிரிகள் தாக்கி விட்டதாகவும், அடிபட்டு ரத்தத்துடன் மயக்க நிலையில் இருந்த தன்னை, தனது அண்ணன் மகனான அ.சா.3 பார்த்து , 108 ஆம்புலன்ஸ் மூலம் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும் அ.சா.ஆ.1–புகாரில் சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில், தஞ்சாவூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது, தகவல் கிடைத்து புகார்தாரரிடம் சென்று புகார் பெற்றதாக சொல்லி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடந்ததற்கு மறுநாள், பூதலூர் காவல் நிலையத்தில் மதியம் 12 மணிக்கு புகார் கொடுத்ததாக புகார்தாரர் அ.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி சொல்லியுள்ள சங்கதியை அப்படியே எடுத்துக் கொண்டாலும், சம்பவம் நடந்தவுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சென்றதாக சொல்லும் புகார்தாரர் சுயநினைவு இல்லாமல் மயக்கத்தில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில், மறுநாள் விசாரணைக்கு வந்த போலீசாரிடம் தானாக எழுதி புகார்

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.05 19:44:18 +0530

கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றும், புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளது போல் காவல் நிலையத்தில் சென்று புகார் அளிக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக சந்தேகம் எழுகிறது.

வழக்கு சம்பவத்திற்கான காரணமாக சொல்லப்படுவது, புகார்தாரர் மோட்டார் வைத்து, வாரியில் இருந்து தனது வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்ததை 1–வது எதிரி இவ்வாறு பாய்ச்சக் கூடாது என்று தடுத்ததே ஆகும். அவ்வாறு தடுத்தபோது, புகார்தாரர், அதை நீ சொல்லக்கூடாது என்று கேட்டதால், 1–வது எதிரி மிரட்டி விட்டு சென்றுவிட்டதாகவும், வயலில் இருந்து திரும்பி வரும்போது வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி தொடர்பாக ஆராயும்போது, புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தான் மோட்டார் பம்பு வைத்து தண்ணீர் எடுத்த இடத்தில் யாரும் தன்னை அடிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே புகார்தாரர் சொல்வதுபோல் வாரியிலிருந்து மோட்டார் வைத்து தண்ணீர் இறைக்கப்பட்டதா? அது 1–வது எதிரியால் தடுக்கப்பட்டதா? அது தொடர்பாக தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை உள்ளதா? என்பது தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்திருத்தல் அவசியம். ஆனால் அவ்வாறு விசாரணை எதுவும் செய்யப்பட்டதாக அறியமுடியவில்லை. மேலும், தரப்பினர்களுக்கு இடையே சொத்து தொடர்பாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பது அ.சா.1–ன் குறுக்கு விசாரணையின் மூலம் தெரியவருகிறது. அது தொடர்பாக முதல் கட்டமாக விசாரணை செய்திருக்க வேண்டிய புலன் விசாரணை அதிகாரி அது குறித்து விசாரணை செய்து அறிக்கையில் குறிப்பிடவில்லை. மோட்டார் வைத்து தண்ணீர் இறைத்தவுடன் பிரச்சனை செய்யாமல் வந்துவிட்டு, இரவு 10.00 மணிக்கு வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளது நம்பக்கூடியதாக இல்லை. அ.சா.1–ஐத் தவிர இரவு 10.00 மணிக்கு வீட்டிலிருந்து காட்டு வாரிக்கு அ.சா.2 சென்று கொண்டிருந்தபோது,

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.05 19:44:23 +0530

தனது சித்தப்பாவின் சத்தம் கேட்டதாகவும், எதிர் திசையில் எதிரிகள் வந்ததாகவும், எதிரி கையில் கட்டை இருந்ததாகவும், தான் சென்று தனது சித்தப்பாவை பார்த்து 108 ஆம்புலன்ஸ் மூலம் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றதாகவும், மறுநாள் என்ன நடந்தது என்று அவரிடம் கேட்டபோது, எதிரிகள் வழக்கு சம்பவம் குறித்து புகார்தாரர் தன்னிடம் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3—ன் சாட்சியத்தின்படி, காட்டுவாரியில் புகார்தாரர் அடிபட்டுக் கிடந்ததாக தெரியவரும் நிலையில், பிறழ்சாட்சியாக மாறியுள்ள அ.சா.2 தெருவில் இவ்வழக்கில் புகார்தாரர் கீழே கிடந்ததாகவும், 2, 4 எதிரிகள் புகார்தாரரை காலால் மிதித்து கொண்டு இருந்ததாகவும், சாட்சியளித்துள்ளது ஒன்றுக்கொன்று முரணாகவும், வழக்கினை முழுவதும் பாதிப்பதாகவும் உள்ளது. வேறு எந்த சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சாட்சியம் அளிக்கவில்லை.

அ.சா.3 தான் தனது சித்தப்பாவான அ.சா.1—ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் மருத்துவமனைக்கு அ.சா.1—ஐ அவரது மனைவி அழைத்துச் சென்றதாக விபத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சுகன்யா இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்—அ.சா.6, தனது சாட்சியத்தில், தன்னை தெரிந்த நான்கு நபர்கள் புது ஆற்றங்க கரையில் தாக்கியதாக சொல்லி புகார்தாரர் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும், அவருக்கு முன் பல் ஆடியது என்றும் இடது மோதிர விரலில் சிராப்புக்காயம் இருந்தது என்றும், நெஞ்சுப் பகுதியில் தொடு உணர்வு வலி இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் மூலம் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது.

ஆனால், சம்பவ இடம், சம்பவத்திற்கான காரணம், இவ்வழக்கு சம்பவம் குறித்து கொடுக்கப்பட்டதாக சொல்லும் புகார், புகார்தாரருக்கு ஏற்பட்டிருந்த

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:29 +0530

காயம் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் ஆகியன குறித்து முரண்பட்ட சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதால், இந்த வழக்கு சம்பவத்தில் எதிரிகளால் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. சம்பவ இடத்திலிருந்து 123 செ.மீ நீளமுள்ள கட்டையை கைப்பற்றியதாக புலன் விசாரணை அதிகாரி சொல்லியுள்ள நிலையில், மேற்சொன்ன முரண்பட்ட சாட்சியங்களால் கைப்பற்றப்பட்ட ஆயுதம் அரசுத தரப்பிற்கு வழக்கிற்கு எவ்வித உதவியும் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சம்பவத்தை அரசு தரப்பில் உரிய முறையில் சந்தேகத்திக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1, 2, 4எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323–ன் கீழும், 3–வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 324, 506(ii)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகளை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

புகார்தாரருக்கு வழக்கு சம்பவத்தில் காயம் ஏற்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால், காயம்பட்ட நபர் என்ற வரையறைக்குள் புகார்தாரரை கொண்டுவர முடியாது என்று இந்நீதிமன்றம் கருதி, கு.வி.மு.ச.பி. 357 ஏ–ன் கீழான இழப்பீடு பொறுத்து எவ்வித உத்தரவும் வழங்க அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:34 +0530

**9. முடிவாக,**

1). 1, 2, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 323–ன் கீழும், 3–வது எதிரி மீது 3–வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள். 341, 294(b), 324, 506(ii)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

2). இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

3).இவ்வழக்கில்**C.P.No.58/2022–**ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான சுமார் **123** செ.மீ நீளமுள்ள மரக்கட்டையை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக உரு தெரியாமல் அழிக்கவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **ஜூன்** மாதம் **5–ம்** நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:40 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | கலையரசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | அறிவழகன் |
| அ.சா.3 | யோகேஷ்வரன் |

| | |
|---|---|
| அ.சா.4 | வீரமணி |
| அ.சா.5 | பவுல்ராஜ் |
| அ.சா.6 | மருத்துவர் திவாகர் |
| அ.சா.7 | சித்ரா (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.11.2018 | புகார் மனு அசல் |
| அ.சா.ஆ.2 | 04.12.2018 | பார்வை மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து அ.சா.4–ன் உடையது |
| அ.சா.ஆ.3 | 04.12.2018 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து அ.சா.4–ன் உடையது |
| அ.சா.ஆ.4 | 27.11.2018 | கலையரசன் விபத்துப் பதிவேடு அசல் |
| அ.சா.ஆ.5 | 27.11.2018 | கலையரசன் காயச்சான்று அசல் |
| அ.சா.ஆ.6 | 04.12.2018 | முதல் தகவல் அறிக்கை அசல் |
| அ.சா.ஆ.7 | 04.12.2018 | பார்வை மகஜர் அசல் |
| அ.சா.ஆ.8 | 04.12.2018 | மாதிரி வரைபடம் அசல் |
| அ.சா.ஆ.9 | 04.12.2018 | கைப்பற்றுதல் மகஜர் அசல் |
| அ.சா.ஆ.10 | 14.12.2018 | படிவம் – 91 |

**அரசு தரப்பு சான்று பொருள்:**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சி.பி. 58/2022–ல் ஒப்படைக்கப்பட்ட மரக்கட்டை |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்:** இல்லை

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:44:59 +0530

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

**சான்றுப் பொருட்கள்:–**இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.05 19:45:06 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.